செய்தி வெளியீட்டு எண்:79 /2021 நாள் : 18.03.2021

**காஞ்சிபுரம், கீழ்கதிர்பூரில் உள்ள தனியார் எரிவாயு சிலிண்டர் குடோன் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி நிறுவனத்தில் தேர்தல் விழிப்புணர்வு வில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் இ.ஆ.ப., அவர்கள் ஒட்டி தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.**

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள பொதுமக்கள் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தும் வகையில் பொதுமக்கள் கூடும் பல்வேறு இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்று (18.03.2021) காஞ்சிபுரம், கீழ்கதிர்பூரில் உள்ள தனியார் எரிவாயு சிலிண்டர் குடோனில் உள்ள எரிவாயு சிலிண்டர்களில் தேர்தல் விழிப்புணர்வு வில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் இ.ஆ.ப., அவர்கள் ஒட்டி, வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தும் வகையில் எரிவாயு சிலிண்டர் நிறுவன பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுடன் வாக்காளர் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து கீழ்கதிர்பூரில் உள்ள தனியார் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை நிறுவனத்தில் உள்ள 20 லிட்டர் குடிநீர் கேன்களில் தேர்தல் விழிப்புணர்வு வில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒட்டி, பொதுமக்கள் அன்றாடம் வீட்டில் பயன்படுத்தக் கூடிய குடிநீர் கேன்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர்களில் தேர்தல் விழிப்புணர்வு வில்லைகள் ஒட்டுவதன் மூலம் வாக்காளர்களுக்கு நினைவூட்டும் வகையில் வருகின்ற ஏப்ரல் 6 ஆம் தேதியன்று சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பி.ஜெயசுதா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.சீனிவாச ராவ், உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் மரு.அனுராதா, உதவி திட்ட அலுவலர்கள் திரு.எழிலரசன், திரு.அமுல்ராஜ், திரு.வீரமணி, திருமதி.கங்கா கௌரி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.**